# ராவிடப்பண்



ஞாயிறு நூற்பதிப்பக வெளியீடு: 2.

# திராவிடப் பண்

( புதுவைச் சிவம் )

1946 ஜூலை ] [ விலை 0—3—6.

"ஞாயிறு நூற் பதிப்பகம்"

28, அம்பலத்தாடையர் மடத்துத் தெரு,

புதுச்சேரி. (F. I.)

# பதிப்புரை

"தமிழர் தன்மதிப்புப் பாடல்கள்" என்னும் நூலை, 1945ம் ஆண்டு டிசம்பர் மீ ஞாயிறு நூற்பதிப்பகத்தின் சார்பாக வெளியிட்டேன். அது, சில மாதத்திற்குள்ளேயே முற்றும் செலவாகிவிட்டது. மீண்டும் இரண்டாம் பதிப்பாக வெளியிட எண்ணினேன். வேறு நூல்கள் வெளிவர இருப்பதாலும், தாள் நெருக்கடியின் காரணத்தாலும் அவ்வெண்ணம் தடைப்பட நேரிட்டது.

ஆயினும், சிறிய அளவிலாவது வேறு பாடல்கள் வெளியிட எண்ணினேன். அதுவே, இத் "திராவிடப்பண்". தோழர்கள் ஆதரிப்பாராக.

அன்பன்,

1—7—46

ச. சிவப்பிரகாசம்.

# திராவிடப் பண்

## திராவிட நாடு

(கருவ மிகுத்த நீலன் எ. மெட்டு)

சீர்மி குத்திடும் நாடு—எம்
திராவிடப் பொன் நாடு!
பேர்மி குத்ததொர் வாழ்வு—கண்ட
பீடுயர் வள நாடு!

தொகையரா

ஆர்ந்திட்ட நல்லறிவுக் கலையாவும் வளர்த்திட்டே
அகிலந் தன்னில்
சூழ்ந்திட்ட அறியாமை இருள்தொலையச்
சுடரொளியாம் அறிவைத் தந்த (சீர்)

பாட்டு

காதற் பிணைப்பில் ஆண்பெண்—மிகக்
களித்து மகிழ்ந்த நாடு!
நீதி விளைத்தே எங்கும்—நல்ல
நேர்மை வகுத்த நாடு!

தொகையரா

தீதென்னும் களைபறித்துச் செம்மையுற
வாழ்வென்னும் பயிர் வளர்த்தே,
பேதமென்ப தொரு சிறிதும் தலைகாட்டாப்
பெருவாழ்வில் மேன்மை யுற்ற (சீர்மி)

# நாட்டு வணக்கம்

(சிறைவாயில் என்பது போல்)

சீரோங்கும் திராவிடமே
திகழ் வளஞ்சேர் (சீ)

பேருறும் வாழ்வு பெற்ற
பீடுயர் தாயகமே !
பெரும்புவி நாயகமே !
வணக்கந் தந்தோம் ! (சீ)

தொகையரா

காரிருள் உலக வாழ்வின் கறையெலாம் தீர்த்துவந்தாய்
கதிரொளி யறிவினாலே !
பாருளோர் உன்னையேத்திப் பலபடப் புகழ்ந்தாரந்நாள்
பகர்வதோ பழமைக் கீர்த்தி !

பாட்டு

ஆரிய உறவுகொண்டே அப்புகழ் யாவுந் தீர்ந்தாய் !
ஆயினும் உனைக்கை விடோம் !
அடிமை தீர்ப்போம் ! (சீ)

---

# திராவிடக் கொடி

(காந்தியோ பரம ஏழை எ. மெட்டு)

நீலவா னிடையே முழுமதி போலே
நிலவுங் கறுப்பில் செம்மை வாய்ந்ததெம் கொடியே !
ஞாலமே புகழ்ந்த திராவிடர் கீர்த்தி
நாட்டுவ தேயதன் நோக்கமென் றறிவீர் !

உரிமையும் பெருமையும் இழந்தடிமை வாழ்வில்
உழன்றிடும் இழிவினை உணர்த்துதல் கருமை!
அரியவாம் கொள்கையை அறிவித்த லேசெம்மை!
அகன்றிட்டா விழிவுகள் மறைந்திடும் கருமை!

செம்மையும் கருமையும் சினக்குறி என்பார்;
திராவிடப் பகைவர்க்கும் அதுபொருள் என்போம்!
வெம்மைசேர் ஆரிய சூழ்ச்சிதான் இனிமேல்
மேவிடுமோ? துயர் வீழ்ந்ததென் றுரைப்போம்! (நீல)

---

# கொடியின் நோக்கம்

(களங்கமில் லாமதியின் ஒளி விளங்கும் எ. மெட்டு)

ஆரிய சூழ்ச்சியெலாம் அழிந்தொழியச் செய்திடவே
சீருடன் பறக்குதுபார் செம்புள்ளிக் கருங் கொடியே!

தொகையரா

பாருலகின் புகழேற் றிந் நாட்டை யாண்ட
பைந்தமிழர் கீர்த்தி யாவும்
சீரழியச் செய்தடிமைத் துன்பவாழ்வில்
சேர்த்து நமை யரித்துவந்த (ஆரி)

பாட்டு

பீடுடைய திராவிடத்தைப் பிறநாட்டார் ஆளுகின்ற
கேடுதனை மிகவுணர்த்திக் கீழ்மை நிலை மாற்றிடவே

தொகையரா

ஆடுதுபார் உயர்வானில்; வட நாட்டார்
ஆதிக்கக் கொள்ளை ஏக!
ஓடுதுபார் பீடையெலாம்! உயராட்சி
திராவிடத்தில் உதயமாக, (ஆரி)

# கொடி வணக்கம்

(மாயா உலகை நீ எ. மெ.)

வாழ்வை உயர்த்திடும் சீர்க்கொடியே
வணங்கினோம் திராவிடப் பெருங்குடியே! எம் (வாழ்)

தாழ்வு நிலையினைத் தகர்த்தெறிந்தே
தன்மான உணர்வினை எமக்களித்தே,
சூழ்ந்திடும் ஆரிய சூழ்ச்சிகள் வீழ்த்திநற்
சுதந்தர வாழ்வளித் திடுங் கொடியே!

துயர் யாவும் தீர்ந்திடச்
சுடர் வானி லாடுவாய்!
அயர் வின்றியாம் உழைத்திட
ஆர்வமே ஊட்டுவாய்!

ஆதலால் திராவிட வாழ்வினிற் புதுமை
ஆர்ந்திடும்! நலனெலாம் சேர்ந்திடும் நன்றே! (வாழ்)

---

# திராவிடர் நிலை

(சொற்பன வாழ்வில் மகிழ்ந்தேன் எ. மெட்டு)

திராவிடர் வாழ்வு முன்னாள்—இவ்வுலகினிலே
சிறந்ததுவாம்—தோழா!
இராவிடம் ஏது சொல்வாய்—அவர் புகழே
ஏனோ இப் பாழ் நிலையே?

உரிமையை நீ மறந்தே—பிறர் நுழைய
ஒப்பியே தாழ்ந்துவிட்டாய்!—அந்தோ,
பெருமையும் நீ யிழந்தாய்!—ஆரியத்தால்
பேதமை ஏற்றுவிட்டாய்!

வேற்றுமை போற்றுகின்றாய்— முயற்சியின்றி
விதியெனக் கூறுகின்றாய்!—தோழா,
சாற்றிடில் உனது நிலை—மிருக நிலை !
தன்மதிப் படைவாயே! (திரா)

---

# தாழ்வுக்குக் காரணம்

(சிதம்பர நாதா எ. மெட்டு)

பல்லவி

உயர்வுடன் வாழ்ந்தார் நமது முன்னோர்கள்
உலகநற் புகழுடனே
ஒருபெரு மிணையிலா வாழ்வினில்! (உயர்)

அனுபல்லவி

துயருடனே இழிவும் அடைந்தே
சொல்லரும் வறுமை வாழ்வடைந்தனை நீயே! (உயர்)

சரணம்

காரணங்க ளறியாய்—எதற்கும் நீ
கடவுளின் செயலெனக் கழறிடுகின்றாய்!
வீர வாழ்வை யிகழ்ந்தே—திராவிடரின்
மேன்மை மறந்தனை நீயே! நொந்தாயே ! (உயர்)

பேத வாழ்வு வளர்த்தாய்— இந்நாட்டில்
பீடைச சடங்குகள் போற்றிடு கின்றாய் !
போதம் யாவும் மறுத்தே—அழிந்தாய் நீ !
புத்தி யுடனினி வாழ்வாய் எந்நாளும்! (உயர்)

# விழித் தெழுவாய்

(சிவக்கிருபையால் எ. மெ.)

உறங்கியது போதும்! வேண்டாம் இனி
உழைத்திடுவோம் வாராய் தோழா! (உ)

சிறந்தநம் திராவிட வாழ்விழந்தோம்!
தீமை தரும் போதை மதச்
சிறுமைச் செயலால் நலிந்தோம்! (உ)

கீர்த்தியில் வாழ்ந்தனர் நமது முன்னோர்!
கீழ்நிலை யேற்றுநாம் சீரிழந்தோம்!
பார்ப்பவர் இகழ்ந்திட வாழ்வதுவோ?
பகை வீழ்த்திட எழுவாய்! அரி
குகைவிட்டெழும் செயல் போலவே! (உ)

---

# இழிவை யுணர்வாய்

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஏகம்

(அநியாய மானதிந்தக் கொடுமைதான் எ. மெ)

சூத்திரனென் றுன்னை யொப்புக் கொள்வதேன்?— உன்றன்
சொந்தமதி யிழந்துமிக இழிவை யேற்று வாழ்வதேன்?
நாத்தடித்த ஆரியமி லேச்சர்கள்—சொல்லும்
நஞ்சனைய அம்மொழியின் பொருளறியா தேற்றதேன்?
தீத்தொழிலைச் செய்பவனென் றுரைக்கின்றார்! —உன்னைத்
தேவடியாள் மைந்தனென்றும் தாழ்ந்தோ னென்றும் [சொல்கின்றார்!
ஆத்திரமோ சிறிதுமின்றித் தோழனே—நீதான்
அடிமையாகிச் 'சாமி'யெனப் பல்லைக்காட்டிவாழ்வதேன்? (சூ)

மனிதரிலே தாழ்வுயர்வு கூறுவோர்—சுத்த
மடையரென அறிவுலகம் சொல்லுவதைக் கேளாயோ?
இனியும்அந்த எய்ப்புவார்த்தை நம்பியே—நீதான்
இழிவு நிலை எற்றுவாழ்வ தேனோ நாளும் வெம்பியே ?
அனைவருமே சமமென்பதை யறிகுவாய்! —இந்த
அகிலமீது நீயுமொரு மனிதனென விளங்குவாய் !
உனதுயிராய்த் திராவிடத்தை எண்ணுவாய் !—உன்னை
உயர்நிலையிற் கொண்டுசேர்க்கும்; துயரம்யாவும்வெல்லுவாய்

(சூத் )

# தீண்டாமை யொழிப்பீர்

(இந்தியத்தாய் மக்களென்னும் பேருதான் எ. மெட்டு)

கண்ணிகள்

ஆறுகோடி மக்களிந்த நாட்டிலே—ஞான
நாட்டிலே—புண்யு நாட்டிலே—மிக்க
அவதிகொண்டு வாழுகின்றார் கேட்டிலே !
வீறுபேசி நாசமாகும் தோழரே—என்றன்
தோழரே—அன்புத் தோழரே—பொல்லா
வேற்றுமையை வளர்ப்பதேனோ கூறுவீர்?

முடுகு

சீறுகின்றீர்! மக்கள் தம்மில் தீண்டாமையும்
சொல்கின்றீர்!
தெருவழியில் அவர்நடக்க உரிமையில்லை என்கின்றீர்!
நாறுமலம்தின்னும் பன்றி நடக்க அங்குக்காண்கின்றீர்!
நாய்கழுதைக் கிருக்கும் உரிமை நாட்டு மக்கட்
கில்லையோ? (ஆறு)

கண்ணிகள்

வெள்ளறிவை இன்னும் கொண்டு வாழ்வதோ?-நாமும்
வாழ்வதோ?-மக்கள் வாழ்வதோ?-நமது
வீழ்ச்சிநிலை மேலும் மேலும் சூழ்வதோ?
குள்ளச் செயல் விட்டெழுவீர் தோழரே—என்றன்
தோழரே-அன்புத் தோழரே-உரிமை
கோரிடுவீர் யாவருக்கும் தோழரே!

முடுகு

கள்ளம் புகல் ஆரியத்தைக் காணுமிடம் சாடுவீர்!
காட்டுகின்ற சாத்திரத்தைக் கட்டைமூட்டிப்போடுவீர்!
உள்ளத்திலே பகுத்தறிவை ஓங்கிடவே செய்குவீர்!
உற்றநமது திராவிடத்தில் உயர்நிலையே காணுவீர் (...

---

# பெண்ணடிமை யொழிக

(சோந்தநா டிழந்து வீணில் எ. மெட்டு)

பெண்களை யடிமை யென்றே
பேசு மிந்த நாட்டிலே,
எண்ணிடும் உரிமை யார்ந்த
இன்ப வாழ்வு தோன்றுமோ?
கண்களி லொன்றை யிழந்தே
காட்சி யின்பம் காண்பதுண்டோ? (பெண்...

தொகையரா

ஆண்மக்கள் சுயநலத்தால் ஆத்திகத்தின்
துணைக்கொண்டு பெண்ணினத்தை
அடிமையெனச் செய்துமிகக் கொடுமை பல
செய்கின்றார்! அந்தோ அன்னார்,

தூண்களென விளங்குகின்றார் உரிமையின்றிச்
சுகபோக வாழ்வு மின்றிச்
சொல்லுகின்ற சாத்திரமும் கடவுள்களும்
அந்நிலைக்குத் துணையாய் நின்றே

பாட்டு

துன்ப வாழ் வளிக்கக் கண்டோம்
தோகையர்க்கு மென் மேலுமே !
இன்ப மென்ப தவர்க்கிலையோ?
ஏனோ இந்தத் தீமையே?

மன்பதை யிகழுகின்ற
மாக்கள் வாழ்வு கொள்ள லாமோ?
மடமையைத் தள்வீர்!
மார்க்கமே கொள்வீர் !
கடமையைச் செய்வீர்!
கறைதவிர்த் துய்வீர் !
காதல் மாதர் போற்றுவீரே !
கண்ய வாழ்வு காணுவீரே ! (பெண்)

## பேதங்கள் ஒழிப்போம்

(சந்திர சூரியர் எ. மெட்டு)

நம்மருந் திராவிட நாட்டினில் யாவரும்
நலமுடன் வாழ்ந்திடவே,
செம்மையாம் அறநெறிச் சட்டங்கள் செய்வோம்
சீர்மிகுந் தோங்கிடவே!

தொகையறா

வெம்மனத் தாரியர் விதித்திட்ட ஒருகுலத்துக்
 கொருநீதி வீழ்த்துவோமே!
எம்மனி தர்க்குமே ஏற்றதோர் பொதுச்சட்டம்
 இயற்றி நாம் வாழுவோமே!

பாட்டு

ஆண்களுக் கேபெண்கள் அடிமையென் றோதிடும்
அக்ரமம் தீர்த்திடுவோம்!
வீண்மத சாதி பேதங்கள் யாவும்
வீழ்ச்சி பெற் றிடச் செய்வோம்!

தொகையறா

தீண்டாமை நெருங்காமை பார்க்காமை என்றோதும்
 தீமையைத் தவிர்த்து நாட்டில்
ஆண்டான் அடிமைமுத லாளிதொழி லாளியெனும்
 அநியாய பேதம் தொலைப்போம்! (நம்ம)

---

# தன்மதிப்படைவோம்

(ஆண்டருள் ஜகதம்பா யானுன் எ. மெட்டு)

இரா: கதன குதூகலம் தாளம்: ரூபகம்

பல்லவி

ஆரியம் செய் சூழ்ச்சியாலே
அடிமையா னோமே! – பொல்லா (ஆ)

அனுபல்லவி

வீர மேவும் திராவிடரே,
விழிப்புணர்ச்சி கொள்வீ ரேநீர்!
 அடிமை யானோமே! (ஆ)

சரணம்

வாழ்வி லெங்கும் துன்பஞ் சூழ்ந்து
வாட்டுகின்ற கொடுமை கண்டோம் !
தாழ்வு தீர வேண்டி இந்நாள்
தன்மதிப்படைவோம் நாமே!
அடிமை யானோமே! (ஆ)

## கலைகள் செய்வோம்

(மனமே கணமும் மறவாதே எ. மெட்டு)

மலைபோல் அறிவுக் கலைகள் செய்வோம்
மானில உயர்வினுக்கே—நாமே (மலை)

அலைபோல் துன்பமே நேர்ந்திடச் செய்யும்
அடிமை வாழ்வு தொலைய
மாநில உயர்வினுக்கே (மலை)

நல்விஞ் ஞானம் நாட்டினிற் பரவ
நனிபல மூடக் கொள்கைகள் ஒழிய,
எல்லையில் கலைசெய்து குவித்திடு வோம்!
மாநில உயர்வினுக்கே (மலை)

வெம்மை வாழ்வில் நம்மை வீழ்த்தி
மேன்மை யாவும் ஏகிடச் செய்த
கம்பன் முதலோர் கழறிய கலைகள் கவிழ்த்தே
மாநில உயர்வினுக்கே (மலை)

## திராவிட ஆட்சி வேண்டுவோம்

(எளியேனை யாள் உலகநாயகி எ. மெ.)

பல்லவி

ஆட்சி வேண்டுவோம் மீட்சி காணவே!
அருந் தோழ ரேநாம் எழில் திராவிட (ஆ)

அனுபல்லவி

மாட்சி யாகுமே சூழ்ச்சி யாரியத்தின்
வஞ்சம் யாவும் தீரும்! நஞ்சுமதம் மாயும்! (ஆ)

சரணம்

இன்ப மெங்கு மோங்கும் ஏழ்மை யாவும் தீரும்!
இன்ன லென்ப தெல்லாம் மின்னல் போல மாயும்!
கன்னல் வாழ்விலே களிகொள்ளுவோம்!
கறை வாழ்வு நீங்கி அறவாழ்வுண்டாக (ஆ)

---

# திராவிடம் பெறுவோம்

(பதிபதம் பணிவது நமது கடன் எ. மெ.)

இரா : சங்கராபரணம்] [தாளம் ஆதி

பல்லவி

இலையெனில் த்ராவிடம் வாழ்வெதற்கு? — நாம்
இருப் பதைவிட இறப்பதே மேன்மையாம்!
(நமக் = கிலையெனில்)

அனுபல்லவி

மலைவிதில் வேண்டாம் மானமே பெரிது!
மதிபெறுவீர்; உரிமையிழந்தே வாழ்வதோ? —
(நமக் - கிலையெனில்)

சரணம்

நம்முடைய நாட்டின் நலனெலாம் மாற்றார்
நாடியே வந்துகொள்ளை கொண்டுமே ஏக,
வெம்பியே மக்களிங்கு வேதனையடைந்துமே
மிகத் துயரில் இழிவில் நிதமும் வாழ்வதோ?
(நமக் — கிலையெனில்)

# திராவிடத்தில்!

(ஈ எறும்போடு எ. மெட்டு)

வாழ்வினி யின்பம் வாய்க்திடும் என்றும்
வளமார் திராவிடத்தில் !
தாழ்வுகள் நீங்கும்! தன்மதிப் போங்கும்!
சஞ்சல மணுகாது!

தொகையரா

வீழ்ந்த இந் நாடது மேன்மையுற் றோங்கிடும்
விளைபொருள் மிகுதியாகும்!
சூழ்ந்திடும் தொழில்பல; துலங்கிடும் அறிவு நூல்
சுதந்தரம் நிலவு மெங்கும்!

பாட்டு

வறுமையே தீரும் பெருமை யுண்டாகும்
வாட்டிடும் துய ரேகும்!
சிறுமைகள் நீங்கும் செய்பொருள் ஓங்கும்
திராவிட ஆட்சியிலே!

தொகையரா

உறவினர் போல யாரும் ஒருமையுற் றிருப்பார், தீமை
ஒழிந்திடும்; நன்மை சேரும்!
திறலுடை வீர ராகித் திகழ்ந்திடுவார்கள் மக்கள்,
சிறந்த சம தர்மம் வாழும் !

---

# தேசியத் தோழருக்கு !

(கண்டதுண்டோ கலியுகத்தில் எ. மெ.)

திராவிடத்தில் வடநாட்டார் ஆதிக்க மேனோ?
தேசியத் தோழர்க[illegible] இந்தியா தேனோ?

இராவிட்டால் அவர்கள் துணை இழிந்து போவோமோ?
இப்போதென்ன திமிதிமென்று வாழுகின்றோமோ?
ஈனநிலை இதையுணரா திருப்பது மேனோ?
மான வாழ்வு தேசியத்தால் மறைந்திடலாமோ?
இன்னல் காண்பீர்! குன்றைப் போல!
இக்குறையைப் போக்குதலே தேசிய மாகும்!
இல்லையெனில் அதை யொழித்தல் மேன்மையதாகும்!

---

# திராவிடர் கழகத்திற் சேர்வீர்

(அன்னையுந் தந்தையும் தானே எ. மெட்டு)

திராவிடர் கழகத்திற் சேர்வீர்!—நம்
தீமையெலாம் அது போக்கிடும் வாரீர் (திரா)

அராவிடத் தாரிய சூழ்ச்சி— இங்
ககற்றியே நிறுவிடும் திராவிடர் ஆட்சி!
பெருமைசேர் நம்இன மாட்சி!—எங்கும்
பேசிடச் செய்திடும் காண்பீர்! (திரா)

வடவரின் ஆதிக்கம் போக்கும்—இங்கே
வாய்ந்தநல் அறிவினை மிகமிகச் சேர்க்கும்!
மடமைகள் யாவையும் தீர்க்கும்!—நல்ல
மாண்புறும் வாழ்வையுண் டாக்கும்! (திரா)

---

# தொண்டர் படையிற் சேர்க!

(வானத்தின் மீது மயிலாடக் கண்டேன் எ. மெட்டு)

கறுப்புடைத் தொண்டர் படையினிற் சேர்ந்தே
கடும்பணி யாற்றிடு வீர்!

அறச்செய லிதுவே; திராவிடர் வாழ்வை
அழகெதன ஆக்கிடுவீர் !

சூழ்ச்சியி னாலே நம்நலம் பறித்தே
சுகித்திடும் ஆரியத்தை
வீழ்ச்சியே கொள்ளச் செய்திட நீரே
விரைந்துமே சேர்ந்திடுவீர் !

வடவர்கள் இங்கே வாணிபங் கொண்டே
வறுமையில் நமைச் சேர்க்கும்
கொடுமையை வீழ்த்தத் திராவிடம் வேண்டிக்
குதித்தெழுந் தேவருவீர் !

மடமையைப் போக்கி வளர்பகுத் தறிவை
வளர்த்திட முன் வருவீர் !
கடமையைச் செய்ய உறுதிகொண் டேநீர்
கறுப்புடை யணிந்திடுவீர் !

வீழ்ந்த இந் நாட்டை மேன்மையிற் சேர்க்க
வீரரே திரண்டிடுவீர் !
சூழ்ந்திட இன்பம் துயரெலாம் ஏகத்
தொண்டுநீர் செய்திடுவீர் ! (கறுப்)

---

# உறுதி கொள்வோம் !

(நமது ஜென்ம பூமி எ. மெ.)

உறுதி கொள்ளுவோமே !
உறுதி கொள்ளுவோமே !
உ[illegible] கொள்ளுவோமே ! (உ)


இறுதி யிறுதி பகைமைக் கென்றே
எச்சரித்து மேன்மைக்கே
அறுதியிட்ட தொண்டு செய்ய (உ)

நமது வாழ்வுப் பயிரைச் சூழ்ந்தே
நாசஞ் செய்யும் ஆரிய
நச்சுக் களையைப் பறித் தெடுக்க (உ)

வடவர் மேலோர் நமைச்சு ரண்டும்
வஞ்சச் செயலைப் போக்கியே
வளமை யிங்குக் கொழிக்கச் செய்ய (உ)

நம்மை யாள்வோர் நாமே யன்றி
நரிக ளல்ல என்றுமே
வெம்மை வாழ்வு தீர்ப்ப தற்கே (உ)

சீரு லாவும் திராவி டத்தைத்
திராவிடரே ஆண்டிட
யாரும் ஒன்று கூடி இன்றே (உ)



---

## திருத்திக் கொள்க.

பக்கம் 4 கடைசி வரியிலுள்ள **பேதமை** என்பதைப் **பேதைமை** எனத் திருத்திக் கொள்க.

## முகப்புப் படம்

முகப்புப் படம் எழுதியுதவியவர், நண்பர் V. ஜெகநாதன் அவர்கள். அவருக்குப் பதிப்பகத்தின் நன்றி யுரியதாகுக.

# புதிய வெளியீடுகள்.

## 1. காதலும்—கற்பும்

காதலின் உயர்வையும், கற்பின் உண்மையையும் விளக்கும் சிறு கவிதை நூல். விலை அணா 3

தனிப்புத்தகம் வேண்டுவோர் 4 அணா ஸ்டாம்பு அனுப்புக. ரூ. 1 அனுப்புவோருக்கு 5 புத்தகங்கள் புக்போஸ்ட் மூலம் அனுப்பிவைக்கப்படும்

ஏஜண்டுகள் தேவை
தக்க கமிஷன் தரப்படும்

## 2. கோகிலராணி

(அச்சில்)


ஆரிய சூழ்ச்சிகளை விளக்கித், தமிழருக்குத் தன்மான உணர்ச்சியையும் எழுச்சியையும் உண்டு பண்ணும் வீரஞ்செறிந்த சீரிய செந்தமிழ் நாடகம் (பாட்டுடன்)

மற்றும் பல

கிடைக்குமிடம்:—

"ஞாயிறு நூற்பதிப்பகம்"

28, அம்பலத்தாடுஜயர் மடத்துத் தெரு,
துச்சேரி




# சகுந்தலா சாயத் தொழிற்சாலை

## புதுச்சேரி.

துவக்கம்: 1936] [தந்தி விலாசம்: கிரீன்

எங்கள் தொழிற்சாலையில் தொழில் நுணுக்கத்தில் தேர்ச்சிபெற்ற நிபுணரின் மேற்பார்வையில், உயர்ந்த கெட்டிச் சாயங்களில்— ஒன்று முதல் நான்குசாயங்களில்-சீட்டி, பாவாடை தாவணி, சேலை ரவிக்கைகள் முதலியவை குறைந்த விலையில் தயாரித்துத் தரப்படும். நூல்களுக்கு இண்டேந்திரன், பிரென்தால்,



பொன். இராமலிங்கம்
ஷை சாயத் தொழிற்சாலை உரிமையாளர்.

டைரெக்ட் மற்றும் பல ரகங்களில் குறைந்த நேர்த்தியாகச் சாயம் தீர்த்துத் தரப்படும்.

ஒருமுறை ஆர்டர்செய்து உண்மை அறியவும்.

T21
R004

ஜோதி பிரஸ், புதுவை.